(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW14 |
| Name | : | **திரு.மாணிக்கம்** |
| Father's Name | : | திரு.ராமசாமி |
| Village | : | பழநி |
| Taluk | : | பழநி |
| Calling | : | வட்டார போக்குவரத்து அலுவலர் |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th September 2025.**

(1 மற்றும் 2 வது எதிரி முன்னிலையில்லை, அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>** :

1. நான் தற்போது விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.11.2009 அன்று காரைக்குடி பகுதி

அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–II ஆக பணிபுரிந்தபோது R.C.No.50/2010, 30.07.2012 ம் தேதியிட்ட கடிதத்தின்படி காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு அவர்கள் கேட்டுக்கொண்ட விபரங்களை இணைத்து அனுப்பியுள்ளேன். TN 57 D 2835 என்ற அம்பாசிடர் காரின் A–Register–ஐ கேட்டார்கள். அது குறித்த விரிவான விளக்கத்தினை நான் காவல் ஆய்வாளருக்கு தெரியப்படுத்தினேன். பாக்கியலட்சுமி என்பவரிடம் 24.07.2001 முதல் 24.05.2007 வரை அவரிடம் இருந்துள்ளது.

2. என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் நான் வழங்கியதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **அறிக்கை உள்ளடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.44** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பாக ஊ.த.க. பிரிவு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. ஊ.த.க. பிரிவு போலிசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் காரைக்குடி அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள், தேதி ஞாபகமில்லை. எனக்கு ஏதாவது கடிதம் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து வந்ததா என்றால் ஆமாம், அந்த

கடிதத்தின் அடிப்படையில்தான் A–Register விபரத்தினை போலிசாருக்கு கடிதம் மூலமாக தெரிவித்தேன். லஞ்ச ஒழிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடமிருந்து கடிதம் வந்ததா அல்லது காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து கடிதம் வந்ததா என்றால் காவல் ஆய்வாளர் திரு.ராஜா என்பவரிடமிருந்து கடிதம் வந்தது.

2. நான் TN 57 D 2835 என்ற அம்பாசிடர் காரின் A–Register குறித்த தகவலை வழங்கும் சமயத்தில் மேற்படி கார் யார் பெயரில் இருந்தது என்றால் அருளானந்தம் என்பவரது பெயரில் இருந்தது. பாக்கியலட்சுமி என்பவரது பெயரில் இருந்த TN 57 D 2835 என்ற அம்பாசிடர் காரானது ஏற்கனவே வேறு ஒருவர் பெயரிலிருந்து பாக்கியலட்சுமி என்பவருக்கு பெயர் உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வண்டியின் மதிப்பு குறித்து நான் எந்த தகவலும் அந்த கடிதத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வாகனங்களை பெயர் உரிமை மாற்றம் செய்யாமல் வேறு ஒரு நபரிடம் அந்த வாகனம் இருக்கும் என்றால் பெயர் மாற்றம் செய்யாமல் அவ்வாறு பயன்படுத்தினால் சட்டத்திற்கு முறணானதாகும். லஞ்ச ஒழிப்பு போலிசாரிடம் அந்த வாகனத்தினை குறித்து தகவல் தெரிவிப்பது குறித்து

எனது மேல் அதிகாரியிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். எனது மேல் அதிகாதியின் அனுமதியை பெற்றுதான் அ.த.சா.ஆ.44 ஐ வழங்கினேன் என்றால் ஆமாம். லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரிக்கும்போது எனது மேல் அதிகாரியின் அனுமதி பெற்ற பின்புதான் அந்த அறிக்கையை கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எழுத்துமூலமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் எந்த விபரமும் கோரவில்லை என்றாலும் என்னிடம் நேரடியாக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.த.சா.ஆ.44–ஐ தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அந்த வாகனத்தின் உண்மை நிலவரங்கள் எதுவும் தெரியாமல் அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.09.18 17:07:36 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.